# பெரிய திருமலை நம்பி
# வாழி திருநாமம்

வைகாசிச் சோதி நாள் வந்துதித்தான் வாழியே
வண்திருவேங்கடமுடையான் வரபுத்திரன் வாழியே
அய்யன் ஸ்ரீஆளவந்தார் அடி தொழுவோன் வாழியே
அனவரதம் மலை குனியர்க்கு அடிமை செய்வோன் வாழியே
மெய்யன் இராமாநுஜாசாரியன் விரும்புமவன் வாழியே
மிக்க திருமலையார்க்கெல்லாம் மேலாவான் வாழியே
செய்ய தமிழ் வேதத்தின் சிறப்பறிந்தோன் வாழியே
திருமலை நம்பிகள் உபய திருவடிகள் வாழியே

---